10.10மணி

அனுமதிகள் வழங்கப்பட்டு, அந்தத் தொழிற்சாலைகள் சுற்றுப்புறச் சூழலைக் கெடுக்கின்ற பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். அதனால் நிலத்தடி நீர் உட்பட பல்வேறு பாதிப்புகள் எல்லாம் ஏற்படுகின்றன. அப்படி மீறி நடக்கக் கூடிய தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இன்றைய வாரியம் என்ற அமைப்பு போதுமான அளவு அதிகாரம் உடையதாக இல்லை என்ற காரணத்தினாலே தான் அப்படி கடுமையான நடவடிக்கை எடுப்பதற்குரிய ஒரு ஆணையமாக, அத்தாரிட்டியாக செயல்படவேண்டும் என்ற கருத்து மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்களாலே வலியுறுத்தப் பட்டது. அதை மீண்டும் பரிசீலித்து அப்படி ஒரு தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வதை உறுதியாகச் செய்வதற்குண்டான முறையிலே இதை ஒரு ஆணையமாக மாற்றித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : துணைத் தலைவர் அவர்களே, இதற்கான பதிலை நான் முன்பே குறிப்பிட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆலோசனைக் குழு.

*1317 **திரு. இரா. மதிவாணன் :**—மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீன்வளத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் மீனவர்களுக்கென்று ஆலோசனைக் குழு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அக்குழு எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). 1986 மார்ச் திங்களில் தமிழ்நாடு மீன் வள ஆலோசனைக் குழு மற்றும் உள்நாட்டு மீன் வள ஆலோசனைக் குழு ஆகிய இரு ஆலோசனைக் குழுக்கள், 1–4–1986 முதல் 31–3–1989 வரை மூன்றாண்டுக் காலம் செயல்பட அமைக்கப்பட்டன. இவ்விரு ஆலோசனைக் குழுக்களின் கால வரம்பு 31–3–1989 வுடன் முடிவுற்றதால் அவற்றை மீண்டும் புதுப்பிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. மதிவாணன் : பேரவைத் தலைவர் அவர்களே. முந்தைய அரசில் இந்தக் குழுவில் இருந்த உறுப்பினர்களைவிடக் கூடுதலாக உறுப்பினர்களைச் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கருத்தை இந்த அரசு சூழ்நிலைக்கேற்ப கருத்தில் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கன்று வளர்ப்புத் திட்டம்.

* 6538 திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் கன்று வளர்ப்புத் திட்டத்திற்கு மூன்றில் ஒரு பங்கு மானியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) வங்கி வழங்கும் கடன் உதவியை ஊக்குவிக்க அரசு மானியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) தஞ்சை மாவட்டத்தில் சில பகுதிகளிலிருந்து சென்ற மீனவர்கள் திரும்பாதது குறித்து, புயல் விளைவித்த பாதிப்புகளையொட்டி எடுக்கவேண்டிய பல்வேறு நடவடிக்கைகள் குறித்தும்.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நம்முடைய தமிழக முதல்வர் அவர்களைச் சந்தித்து மீனவர்கள் காணாமல் போன சில விவரங்களை நானும்